


dinakani2023@gmail.com

நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 286 | 4 Pages | 13.5.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 286 | 4 பக்கங்கள் | 13.5.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றந்**

**தீமை யிலாத சொலல்**

**விளக்கம்: வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.**

## பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் பிஎஸ்எப் சப்இன்ஸ்பெக்டர் வீர மரணம்



காபூல், மே.13

ஆப்கானிஸ்தானில் சதுரங்க விளையாட்டுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து விளையாட்டு இயக்குநரக செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி கூறுகையில்,

"இஸ்லாமிய ஷரியாவின் கீழ் சதுரங்கம் சூதாட்டத்தின் ஒரு வழிமுறையாக கருதப்படுகிறது. இது நாட்டின் நன்மையை ஊக்குவித்தல் மற்றும் தீமையைத் தடுப்பதற்கான சட்டத்தின்படி தடை செய்யப்பட்டுள்ளது. சதுரங்க விளையாட்டிற்கு மத ரீதியான ஆட்சேபனைகள் உள்ள நிலையில் அது தீர்க்கப்படும் வரை, ஆப்கானிஸ்தானில் இந்த விளையாட்டு நிறுத்தி வைக்கப்படும்."

இவ்வாறு அவர் கூறினார். இந்த முடிவு சதுரங்க ஆர்வலர்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்கள் மத்தியில் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. முன்னதாக பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்கத் தாலிபான் அரசு தடை விதித்தது குறிப்பிடத்தக்கது.

## ஆப்பிரிக்க நாடான காங்கோவில் கடும் வெள்ளப்பெருக்கு... 100க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



கின்ஷாசா, மே.13

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கிழக்கு மாகாணமான கிவுவில் வியாழக்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை வரை மழை வெளுத்து வாங்கியது. இதன் காரணமாக நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உள்பட பல ஏரிகள் நிரம்பின. தொடர்ந்து பெய்த கனமழையால் அந்த ஏரியின் கரை உடைந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் ஏரிக்கரையோரம் அமைந்துள்ள கசாபா கிராமத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் அங்கிருந்த பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த கட்டிட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து மீட்பு பணி துரிதப்படுத்தப்பட்டது. இதில் மீட்பு படையினருக்கு உதவியாக உள்ளூர் மக்களும் இணைந்தனர். அவர்கள் படகுகள் மூலம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர்.

எனினும் இதுவரை நடைபெற்ற மீட்பு பணியில் பலர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர். மேலும் 50 பேர் மாயமானதாக கூறப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்ற வருகிறது. இதற்கிடையே வெள்ளப்பெருக்கால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டது.

இந்த நிலையில் இறந்தவர்களில் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் எனவும் இதில் 28 பேர் காயமடைந்தனர். சுமார் 150 வீடுகள் அழிக்கப்பட்டன என்றும் பிராந்திய நிர்வாகி ஒருவர் கூறினார். இதனையடுத்து பிராந்திய நிர்வாகி சம்மி கலோஞ்சி கூறுகையில், இந்த வெள்ளப்பெருக்கு குறைந்தது 104 பேரைக் கொன்றது மற்றும் பெரும் பொருள் சேதத்தை ஏற்படுத்தியது என்றும் கூறினார்

## பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை: இங்கிலாந்து கடற்படை தலைமை தளபதி பணியில் இருந்து விடுவிப்பு



லண்டன், மே.13

இங்கிலாந்து கடற்படையின் தலைமை தளபதி அட்மிரல் பென் கீ. இவர் தனது அலுவலகத்தில் பணிபுரியும் பெண் ஊழியரை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான விசாரணை ராணுவ உயர்மட்ட அதிகாரிகள் தலைமையில் நடைபெற்று வருகிறது.

எனவே நியாயமான விசாரணைக்காக பணியில் இருந்து தற்காலிகமாக அவர் விடுவிக்கப்பட்டு உள்ளார். குற்றச்சாட்டு உறுதியாகும் பட்சத்தில் நிரந்தரமாக அவர் பணிநீக்கம் செய்யப்படுவார் எனவும், அதுவரை துணை அட்மிரல் மார்ட்டின் கானெல் கடற்படையின் தலைமை தளபதியாக பொறுப்பு வகிப்பார் எனவும் இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஆப்பிரிக்காவில் கனமழை: பெருக்கெடுத்து ஓடிய வெள்ளப்பெருக்கில் சிக்கி 62 பேர் பலி

கின்ஷாசா, மே.13

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோ ஜனநாயக குடியரசில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கிழக்கு மாகாணமான கிவுவில் மழை வெளுத்து வாங்கியது.

இதன் காரணமாக நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உள்பட பல ஏரிகள் நிரம்பின. தொடர்ந்து பெய்த கனமழையால் அந்த ஏரியின் கரை உடைந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் ஏரிக்கரையோரம் அமைந்துள்ள கசாபா கிராமத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் அங்கிருந்த பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின.

இந்த கட்டிட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து மீட்பு பணி துரிதப்படுத்தப்பட்டது. இதில் மீட்பு படையினருக்கு உதவியாக உள்ளூர் மக்களும் இணைந்தனர். அவர்கள் படகுகள் மூலம் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர்.

எனினும் இதுவரை நடைபெற்ற மீட்பு பணியில் 62 பேர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர். மேலும் 50 பேர் மாயமானதாக கூறப்படுகிறது. எனவே அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்ற வருகிறது.

இதற்கிடையே வெள்ளப்பெருக்கால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டது. அதனை சரிசெய்து மீட்பு பணியை துரிதப்படுத்த கிவு மாகாண சுகாதாரத்துறை மந்திரி மீட்பு படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து



சென்னை, மே.13

ஒவ்வொரு ஆண்டும் மே 12ந் தேதி (இன்று) பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையிலும், செவிலியர்களை கவுரவிக்கும் வகையிலும், நோயாளிகளுக்கு செவிலியர்கள் செய்யும் சேவைகளை போற்றும் வகையிலும் 'உலக செவிலியர் தினம்' கொண்டாடப்படுகிறது.அதன்படி, உலக செவிலியர் தினத்தையொட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

தன் எதிரில் உள்ள மனிதரின் பாலினம், சமூகத் தகுதி, சாதிமதம் நிறம் என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோலக் கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் தூய உள்ளங்களான செவிலியர்கள் அனைவருக்கும் உலக செவிலியர் நாள் வாழ்த்துகள். தன்னலம் துளியும் பாராமல் எல்லோரையும் தங்கள் உன்னத சேவையால் அரவணைத்து,

கஷ்டத்திலும் கருணை காட்டி, தளர்விலும் தன்னம்பிக்கை காட்டி, ஆண் – பெண் வேறுபாடின்றி , சேவை மட்டுமே முதன்மையாக கொண்டு தொண்டாற்றும் செவிலியர் சகோதர சகோதரிகள் அனைவருக்கும், செவிலியர் தின நல்வாழ்த்துகள்.

உலகம் முழுமையும் இருக்கின்ற செவிலியர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நோயின் தன்மை அறிந்து, நோயாளிகளின் தன்மை அறிந்து, இடம் அறிந்து, காலம் அறிந்து அவர்களைத் தேற்றும் கடமை ஆற்றுவதற்கு, எல்லையற்ற பொறுமை வேண்டும். தாய் உள்ளம் வேண்டும். அத்தகைய தாய்க்கு ஈடானவர்கள் செவிலியர்கள். தற்போது ஆண் செவிலியர்களும் களப்பணி ஆற்றி வருகின்றார்கள். புனிதமான செவிலியர் சேவையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு இருக்கின்ற அனைவருக்கும்,வாழ்த்துகள்

தன்னலம் கருதாமல் மக்களின் உயிர்காக்கும் மகத்தான சேவையில் தாயுள்ளத்துடன் ஈடுபடுபவர்கள் செவிலியர்கள். நாளின் 24 மணி நேரமும் நோயாளிகளுக்கு பராமரிப்பு மற்றும் ஆறுதலை வழங்குபவர்கள். இந்த நாளில், மருத்துவ நிறுவனங்களின் முதுகெலும்பாக இருக்கும் செவிலியர்களின் அயராத உழைப்பு, இரக்கம் மற்றும் அர்ப்பணிப்பைக் கொண்டாடுவோம். செவிலியர்களின் கடின உழைப்புக்கும், அர்ப்பணிப்புக்கும் மருத்துவத் துறையில் பணியாற்றும் அனைவரின் சேவைகளுக்கும், நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்களாக, மக்களை பாதுகாப்பதில் அளப்பரிய அன்பு கொண்டவர்களாக, சேவை மனப்பான்மை மிக்க அன்னையர்களின் மறுபிறவியாக மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு அடுத்த நிலையில் பணியாற்றிவரும் செவிலியர்களின் அர்ப்பணிப்பு உணர்வை போற்றிக் கொண்டாடும் உலக செவிலியர் தினம். செவிலியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி மகிழ்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் ஆருடம் சொன்ன நடிகை புவனேஷ்வரி



திருப்பூர், மே.12

தமிழ் சினிமா திரைப்பட நடிகையும், சின்னத்திரை சீரியல் நடிகையுமான புவனேஷ்வரி திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள ரெட்டார வலசில் பிரத்தியங்கிரா தேவி பீடம் ஒன்றை நிறுவியுள்ளார். அதில் தினந்தோறும் பூஜைகளும், அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் விசேஷ பூஜைகளும் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் நேற்று அந்த கோவிலில் குரு பெயர்ச்சி யாகம் நடைபெற்றது. அதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.பூஜையின் முடிவில் நடிகை புவனேஸ்வரி பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.அப்போது அவர் கூறியதாவது: நமது பிரத்தியங்கிரா கோவிலில் குரு பெயர்ச்சி யாகம் மதியம் 1.20 மணியிலிருந்து 1.37 மணிக்குள் நடந்துமுடிந்தது. அகஸ்தியரால் உருவாக்கப்பட்ட பிரத்யங்கிரா தேவி கோவிலில் குரு பெயர்ச்சி யாகத்தில் யாகத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நினைத்தது நடைபெறும். வரும் நாட்களில் கோவிலின் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்ற செப்டம்பர் மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அதில் தமிழ் திரையுலக நட்சத்திரங்கள், அரசியல் கட்சி முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்தியா பாகிஸ்தான் போரில் பிரதமர் மோடி சரியான முடிவு எடுத்துள்ளார். நம் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் சாதி,மத பேதங்களைக் கடந்து ஒற்றுமையுடன் தான் வாழ்ந்து வருகிறோம். பிரிவினை பார்ப்பது அவரவர் பார்வையில் உள்ளது. வருகிற 2026 சட்ட மன்ற தேர்தலில் திமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று நடிகை புவனேஷ்வரி கூறினார்.

## அரக்கோணத்தில் ரெயிலை கவிழ்க்க சதி : உத்தரகாண்ட் சாமியார் கைது



ராணிப்பேட்டை மே.13

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே மேல்பாக்கம் வளைவு என்ற இடத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு ரெயில்வே தண்டவாளத்தில் கற்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும், தண்டவாள இணைப்பு போல்டுகள் கழற்றப்பட்டு தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்தன. ரெயிலை கவிழ்க்கும் முயற்சியாக இவ்வாறு செய்யப்பட்டிருந்தது. இந்த சதிச்செயலை உரிய நேரத்தில் ரெயில்வே அதிகாரிகள் கண்டுபிடித்து கற்கள், போல்டுகளை அகற்றினார். இதனால் ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து அரக்கோணம் வழியாக புதுச்சேரி சென்ற எக்ஸ்பிரஸ் ரெயில் மிகப்பெரிய விபத்தில் இருந்து தப்பியது. இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த ரெயில்வே போலீசார் சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் தீவிர விசாரணை நடத்தி வந்த னர்.

இந்நிலையில், அரக்கோணத்தில் ரெயிலை கவிழ்க்க சதி திட்டம் தீட்டிய சாமியாரை ரெயில்வே போலீசார் இன்று கைது செய்தனர். ரெயில் தண்டவாளத்தின்மீது கற்களை வைத்த உத்தரகாண்டை சேர்ந்த ஹோம் என்ற சாமியாரை சிசிடிவி காட்சிகள் அடிப்படையில் இன்று கைது செய்தனர். அந்த நபரிடம் ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பூந்தமல்லி: சாலைத் தடுப்பில் மோதி பைக் விபத்து ஓட்டிச் சென்ற 13 வயது சிறுவன் பலி





சென்னை, மே.13

பூந்தமல்லி அடுத்த நசரத்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் கலைவாணன். டிரைவராக உள்ளார். இவருக்கு பிரியன் (13 வயது) என்ற மகன் உள்ளார். இவர் அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வந்தார். கலைவாணன் இன்று வேலை காரணமாக வெளியூர் சென்றுள்ளார்.

இந்த நிலையில் வீட்டில் இருந்த தந்தையின் பைக்கை எடுத்துக் கொண்டு அதே பகுதியைச் சேர்ந்த தனது நண்பர்களான 2 சிறுவர்களுடன் பிரியன் சுற்றியுள்ளார். வண்டலூர் மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் 3 பேரும் பைக்கில் வேகமாக சென்று கொண்டிருந்தபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்த பைக் சாலை தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் தூக்கி வீசப்பட்ட 3 பேரும் பலத்த காயமடைந்தனர். அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் சிறுவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் பிரியன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். மேலும் காயமடைந்த மற்ற 2 சிறுவர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## பாஜக கூட்டணிக்கு விஜய் வருவாரா? நயினார் நாகேந்திரன் பதில்

நாகர்கோவில், மே.13

நாகர்கோவிலில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

திமுக ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. ஆனால் அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறிய எதையும் சரியாக நிறைவேற்றவில்லை. ஆயிரம் ரூபாய் தருவதாக கூறினார்கள். ஆனால் 2½ ஆண்டுகளுக்கு பிறகு தான் கொடுத்தார்கள். வீட்டு வரி, சொத்து வரி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதை மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சூழல் உள்ளது.

வெகு விரைவில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தேர்தல் வரும், மாற்றமும் வரும். திமுக ஆட்சியில் சட்டம்ஒழுங்கு கெட்டுப்போய் உள்ளது. தற்போதைய சூழலில் தேச விரோத செயலாக நாட்டுக்கு எதிராக பேசியவர்கள் மீது தமிழகத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



தேர்தல் கூட்டணி தொடர்பாக இன்னும் கால அவகாசம் உள்ளது. நிறைய கட்சிகள் எங்களது கூட்டணிக்கு வருவார்கள். நடிகர் விஜய் கூட்டணிக்கு வர வேண்டும் என்று நான் சொல்லவில்லை. எல்லா கட்சியும் ஓரணியில் சேர வேண்டும் என்று சொல்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## பெரம்பலூர்: திடீரென பற்றி எரிந்த கார் 5 பேர் படுகாயம்

பெரம்பலூர், மே.13

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே சாலையில் கார் ஒன்று சென்று கொண்டிருந்தது.

இதில் பெண்கள் உள்பட 5 பேர் காரில் இருந்தனர். அப்போது திடீரென கார் தீப்பிடித்து எரிந்தது. இதனால், காரில் பயணித்தவர்கள் அலறினர்.

பின்னர், பலத்த தீ காயங்களுடன் அவர்கள் காரை விட்டு வெளியேறினர். அவர்களை மீட்ட அருகில் இருந்தவர்கள். உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் காரில் வைத்திருந்த சீட்டு பணமும் தீயில் கருகியது. படுகாயமடைந்த 5 பேரும் மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.



விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள், தீயை அணைத்தனர். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்து முன்னணி மாவட்ட செயலாளர் மனைவி கொலை

நாமக்கல், மே.13

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அடுத்த பொத்தனூரை சேர்ந்த இந்து முன்னணியின் நாமக்கல் மாவட்ட செயலாளர் ஜெகதீஷன் (38), இவரது மனைவி கீதா (36) மற்றும் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர்.



இந்த நிலையில் இவர் வழக்கம்போல இரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த நிலையில் கையில் அரிவாளுடன் மர்ம நபர்கள் வீட்டிற்குள் புகுந்து வெட்டியதில் கீதா சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு. இதில் ஜெகதீஷன் தலை, கை, கால் உள்ளிட்ட பகுதிகளில் வெட்டுக்காயம் ஏற்பட்டதால் அவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஜெகதீஷனை மீட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தற்போது மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் நாமக்கல் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இந்த கொலையை யார் செய்திருப்பார்கள்? என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## எடப்பாடி பழனிசாமிக்கு அண்ணாமலை பிறந்தநாள் வாழ்த்து

சென்னை, மே.13

அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல் அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இன்று தனது 71வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதையொட்டி அவருக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில்,




பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை எடப்பாடி பழனிசாமிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "தமிழக முன்னாள் முதல்அமைச்சரும் அஇஅதிமுக பொதுச்செயலாளருமான, அண்ணன் எடப்பாடி பழனிசாமிக்குஇனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். எடப்பாடி பழனிசாமி நல்ல உடல் நலத்துடன், நீண்ட ஆயுளுடன் தனது மக்கள் பணிகள் தொடர, இறைவனை வேண்டிக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## சேலம் இரட்டைக்கொலை சம்பவம் ஒருவர் கைது

சேலம், மே.13

சேலம் சூரமங்கலத்தை அடுத்த ஜாகீர் அம்மாபாளையம் பகுதியைச்சேர்ந்தவர் பாஸ்கரன் (65). இவர், தனது வீட்டின் ஒரு பகுதியில் மளிகைக் கடை நடத்தி வந்தார். இவரது மனைவி வித்யா (60).




இந்நிலையில் நேற்று மதியம் பாஸ்கரனும், வித்யாவும் வீட்டில் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர். இதைக் கண்ட அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்து, போலீசாருக்குத் தகவல் தெரிவித்தனர். போலீஸார்அங்குசென்று பார்த்தபோது, வித்யா உயிரிழந்து கிடந்தார். பலத்த காயத்துடன் இருந்த பாஸ்கரனை போலீஸார்மீட்டு, சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே அவர் உயிரிழந்தார். முதல் கட்ட விசாரணையில் இருவரும் கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. வித்யா அணிந்திருந்த நகைகள்மாயமாகி இருப்பது தெரிய வந்தது.

எனவே, இருவரும் நகைக்காக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து, கொலையாளிகளைத் தேடி வருந்தனர்.

இந்த நிலையில், முதியவர்களை கொலை செய்தது அதே பகுதியை சேர்ந்த சந்தோஷ் என்பது போலீசார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர் பீகார் மாநிலத்தை சேர்ந்தவர். அந்த பகுதியில் தங்கியிருந்து பணிபுரிந்து வருகிறார். கடன் பிரச்சினை காரணமாக இருவரையும் அடித்து கொலை செய்ததாகவும், அவர்களிடம் இருந்து 10 சவரன் செயினை எடுத்துச் சென்றதாகவும் சந்தோஷ் போலீசில் வாக்குமூலம் அளித்துள்ளார். அவரிடம் போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடன் தொல்லை காரணமாக பக்கத்து வீட்டை சேர்ந்த முதிய தம்பதியை ஒருவர் அடித்து கொலை செய்து, அவர்களிடமிருந்து நகையை பறித்துச் சென்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சித்திரைத் திருவிழாவில் பக்தர் உயிரிழப்பு



மதுரை, மே.13

'கோவில் மாநகர்' என்ற பெருமைக்கு உரிய மதுரை மாநகரில் மாதந்தோறும் திருவிழா நடைபெற்று வருகிறது. அந்த விழாக்களில் சித்திரைத்திருவிழா வரலாற்றுச் சிறப்பு பெற்றதாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும், மதுரை அருகே உள்ள அழகர்கோவிலையும் இணைத்து இந்த விழா நடக்கிறது. சைவமும், வைணவமும் ஒருங்கிணைந்த பெருவிழாவாக இந்த திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சிறப்பு மிக்கசித்திரைத்திருவிழா கடந்த மாதம் 29ந்தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்நிலையில் இன்று காலை 5.45 மணி முதல் 6.05 மணிக்குள் தங்கக்குதிரையில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கினார். வண்டியூர் வீரராகவப்பெருமாள் முன்கூட்டியே அங்கு வந்திருந்து கள்ளழகரை வரவேற்றார். இதனைத்தொடர்ந்து காலை 7.25 மணி வரை கள்ளழகர் வைகை ஆற்றில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

இதனைக் காண ஏராளமான பக்தர்கள் வருகை தந்திருந்தனர். இந்த நிலையில் கூட்டத்தில் இருந்த பூமிநாதன் (45) என்பவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து ஆம்புலன்ஸ் மூலம் அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டது. இருப்பினும் பூமிநாதன் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் பரிதாபமாக உயிரிழந்தார்.

## ராமேசுவரம் கோவிலில் ஓ.பன்னீர்செல்வம் சிறப்பு வழிபாடு

ராமேசுவரம், மே.13

ராமேசுவரம் கோவிலுக்கு கடந்த 2ந் தேதி முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தனது சகோதரி மற்றும் மகனுடன் வந்து அக்னி தீர்த்த கடல், கோவிலில் உள்ள தீர்த்த கிணறுகளிலும் நீராடி தரிசனம் செய்தார். அப்போது மறைந்த தனது பெற்றோர், மனைவியின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி திதி தர்ப்பண பூஜையும் செய்தார். மேலும் அவர் இங்கிருந்து தீர்த்தம் மற்றும் மணலுடன் காசி சென்றிருந்தார்.



இந்நிலையில் காசி யாத்திரை முடிந்து அங்கிருந்து காசி தீர்த்தம் எடுத்துக்கொண்டு ஓ.பன்னீர்செல்வம் நேற்று தனது சகோதரிகள் மற்றும் மகன் ரவீந்திரநாத்துடன் மீண்டும் ராமேசுவரம் கோவிலுக்கு வந்தார். அவர் கங்கை தீர்த்தம் அடங்கிய கலசத்தை கோவிலின் விசுவநாதர் சன்னதி எதிரே வைத்து ருத்ராபிஷேக பூஜை செய்தார். தொடர்ந்து சுவாமிக்கு கங்கை தீர்த்தத்தால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அப்போது ஓ.பன்னீர்செல்வம், அவரது சகோதரிகள், மகன் ரவீந்திரநாத் ஆகியோர்தரிசனம் செய்தனர். தொடர்ந்து நடராஜர் சன்னதி, பதஞ்சலி மகரிஷி ஜீவசமாதி, ஆஞ்சநேயர் உள்ளிட்ட சன்னதிகளுக்கும் சென்று தரிசனம் செய்தனர். அப்போது தர்மர் எம்.பி., நகரசெயலாளர் ராமர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் உடனிருந்தனர்.

## தங்கை மீது பெற்றோர் அதிக பாசம்... மனவேதனையில் 10ம் வகுப்பு மாணவி எடுத்த விபரீத முடிவு



கோவை, மே.13

கோவை பாப்பநாயக்கன்பாளையம் பழையூரை சேர்ந்தவர் சுரேஷ்குமார் (வயது 45). பார் உரிமையாளர். இவருடைய மூத்த மகள் ஷாகித்யா (வயது 15). இவர் 10ம் வகுப்பு படித்து உள்ளார். மற்றொரு மகள் 3ம் வகுப்பு படித்து வருகிறார். ஷாகித்யாவுக்கும் அவருடைய தங்கைக்கும் 7 வயது வித்தியாசம்.

இதனால் பெற்றோர், ஷாகித்யாவிடம் நீ பெரியவள் என்பதால், நீதான் தங்கையை பார்த்துக்கொள்ள வேண்டும், அவளுக்கு தேவையானதை செய்து கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி கூறியதாக தெரிகிறது. ஷாகித்யா, தன்னிடம் பெற்றோர் பாசம் காட்டுவது இல்லை என்றும், தங்கை மீது அதிகமாக பாசம் காட்டுவதாகவும் கருதி உள்ளார். இது குறித்து அவர், தனது பெற்றோரிடமும் அடிக்கடி கூறியதாக தெரிகிறது.

இந்த நிலையில் சம்பவத்தன்று 2வது மகள் தனது தாயிடம் மக்காச்சோளம் கேட்டு உள்ளாள். உடனே அவர் தனது மூத்த மகளிடம் தங்கைக்கு மக்காச்சோளம் செய்து கொடு என்று கூறி உள்ளார். உடனே அவரும் மக்காச்சோளத்தை எடுத்து அவித்து தங்கைக்கு கொடுத்து உள்ளார். இதற்கிடையே தங்கையிடம் அதிக பாசம் காட்டுகிறார்கள். தன்னிடம் பாசம் காட்டுவது இல்லை என்று கருதிய ஷாகித்யா மனவேதனையில் விரக்தி அடைந்தார்.

இதையடுத்து அவர், தனது அறைக்குள் சென்று கதவை பூட்டிக் கொண்டு தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். மூத்த மகள் தற்கொலை செய்துகொண்ட பார்த்த பெற்றோர் கதறி துடித்தனர்.


சத்தம் கேட்டு விரைந்து வந்த அக்கம் பக்கத்தினர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தினர். தகவலின் பேரில் விரைந்து வந்த ரேஸ்கோர்ஸ் போலீசார் ஷாகித்யாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்வு

நாமக்கல், மே.13

நாமக்கல் மண்டலத்தில் 525 காசுகளுக்கு கோழிப் பண்ணைகளில் முட்டை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டது. அதனால் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணைகளில் 530 காசுகளுக்கு முட்டை கொள்முதல் செய்யப்பட உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.



இதனிடையே நாமக்கல் மண்டலத்தில் கறிக்கோழி கிலோ ரூ.102க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. பின்னர் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அதன் விலையில் ரூ.3 உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன் காரணமாக கறிக்கோழி ஒரு கிலோவின் விலை ரூ.105 ஆக ஆனது. மேலும் முட்டைக்கோழி கிலோ ரூ.97க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. அவற்றின் விலையில் மாற்றம் ஏதுமில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## தாய் யானையுடன் சேர்க்கும் முயற்சி தோல்வி.. முதுமலைக்கு கொண்டுசெல்லப்பட்ட குட்டி யானை

கோவை, மே.13

நீலகிரி, கோவை, ஈரோடு உள்பட பல்வேறு மாவட்ட வனப்பகுதிகளில் காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன. இதில் தாயை பிரிந்து தவிக்கும் குட்டி யானையை வனத்துறையினர் மீட்டு, அதன் உடல் நலனை பாதுகாப்பதுடன் மீண்டும் தாய் யானையுடன் சேர்க்கும் முயற்சியில் சில சமயங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், அதில் பலன் கிடைக்காத போது முதுமலை புலிகள் காப்பகத்துக்கு கொண்டு வருகின்றனர். இவ்வாறு தாயை பிரிந்து தவிப்பது மற்றும் ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளை பராமரிக்கும் மையமாக முதுமலை தெப்பக்காடு வளர்ப்பு முகாம் திகழ்கிறது. இந்தநிலையில்கோவை மாவட்டம் மதுக்கரை பகுதியில் தாயை பிரிந்து ஒரு மாத ஆண் குட்டி யானை தவித்தது.



இதை கண்ட வன ஊழியர்கள் குட்டி யானையை மீட்டு தாய் யானையுடன் சேர்க்கும் முயற்சியில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வந்தனர். ஆனால், அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இதைத் தொடர்ந்து காட்டு யானைகள் கூட்டத்துடன் குட்டியை சேர்க்க முயன்றனர். ஆனால், சக யானைகள் சேர்க்க மறுத்தது. இதையடுத்து குட்டி யானையை மீட்டு முதுமலை தெப்பக்காடு முகாமுக்கு கொண்டு செல்ல அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம்கோவையில் இருந்து நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் தெப்பக்காடு முகாமுக்கு குட்டி யானை கொண்டு வரப்பட்டது. பின்னர் தனி அறையில் குட்டி யானையை வன அதிகாரிகள் அடைத்து, 3 வேளையும் திரவ உணவுகள் அளித்து பராமரித்து வருகின்றனர். இதுகுறித்து வனத்துறையினர் கூறும் போது, பிறந்து ஒரு மாதமே ஆன குட்டி யானை ஆரோக்கியத்துடன் உள்ளது. இதனால் பராமரிப்பு பணி மேற்கொள்ள தனியாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டு கவனிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் முகாமில் 29 வளர்ப்பு யானைகள் உள்ளது என்றனர்.

## திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி கிரிவலம்: கனரக வாகனங்களுக்கு தடை

திருவண்ணாமலை, மே.13

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.



திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் கோவிலின் பின்புறம் உள்ள அண்ணாமலை என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் 14 கிலோ மீட்டர் தூரம் கொண்ட கிரிவலப்பாதையில் கிரிவலம் செல்வார்கள்.

இந்த ஆண்டிற்கான சித்ரா பவுர்ணமி நேற்று இரவு சுமார் 8.53 மணியளவில் தொடங்கியது. இதையொட்டி நேற்று அதிகாலை முதல் அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்ய குவிந்தனர். பக்தர்கள் நீண்ட வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்தனர். லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். சித்ரா பவுர்ணமி இன்று இரவு 10.48 மணி வரையில் உள்ளதால் பக்தர்கள் தொடர்ந்து கிரிவலம் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில், சித்ரா பவுர்ணமியையொட்டி கிரிவலத்திற்கு செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், கனரக வாகனங்கள் திருவண்ணாமலை நகருக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கார், சிறிய ரக வாகனங்கள், அரசு பஸ்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றன. கனரக வாகனங்கள், கண்டெய்னர் லாரி உள்ளிட்ட அனைத்து வகை லாரிகளுக்கும் போளூர் புறவழிச் சாலையில், செங்கம், கலசப்பாக்கம் உள்ளிட்ட மாற்றுச் சாலைகளின் வழியே செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தங்கத்தில் முதலீடு செய்தால் கூடுதல் லாபம் எனக்கூறி ரூ.90 லட்சம் மோசடி




திருப்பூர், மே.13

திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தவர் 37 வயது தொழிலதிபர். அவரிடம் கடந்த பிப்ரவரி மாதம் 18ந்தேதி வாட்ஸ் அப் மூலம் ஒருவர் உரையாடலை தொடங்கினார். அவர் தன்னை ஸ்டாக் அனாலிசிஸ் உறுப்பினர் என அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார். தொடர்ந்து அதிகமான பங்குகளை வாங்குவதன் மூலம் அதிகப்படியான லாபத்தை சம்பாதிக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அந்த தொழிலதிபர் வாட்ஸ் அப் குழுவிலும் இணைக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து அதில் தங்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் அதிக லாபத்தை எடுக்கலாம் எனக்கூறி அதற்கான விவரங்களை பகிர்ந்துள்ளனர்.

இதனை நம்பிய தொழிலதிபர் அதில் இருந்த லிங்குக்குள் சென்று தனக்கென ஐ.டி., கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கினார்.

தொடர்ந்து வாட்ஸ் அப்பில் வந்த தகவல்படி குறிப்பிட்ட வங்கி கணக்கிற்கு 17 தவணைகளில் ரூ.90 லட்சம் பரிமாற்றம் செய்துள்ளார்.

இந்த நிலையில் முதலீடு செய்த தொகைக்கான லாபத்தை எடுக்க முயன்ற போது 3 சதவீதம் கூடுதல் கட்டணம் செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

கூடுதல் கட்டணம் செலுத்த முடியாது என தொழிலதிபர் கூறியதை தொடர்ந்து, மேலும் கூடுதலாக ரூ.60 லட்சத்தை வங்கி கணக்கில் செலுத்துமாறு கூறியுள்ளனர்.

இதன்பிறகே தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த தொழிலதிபர் ஆன்லைன் மூலம் மாநகர சைபர் கிரைம் போலீசாரிடம் புகார் அளித்தார். புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த சைபர் கிரைம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிர்ச்சி சம்பவம்: கயிற்றால் கழுத்தை இறுக்கி மாணவி கொலை: தந்தையும் தற்கொலை





அரியலூர், மே.13

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் பகுதியை சேர்ந்தவர் ரவி (வயது 50) ஆட்டோ டிரைவர். இவரது மனைவி செல்வி (45). இவர்களுடைய மகள்கள் ரஞ்சனி (19), சந்தியா (17).

இதில், ரஞ்சனி பி.எஸ்சி. நர்சிங் படித்து வருகிறார். சந்தியா சமீபத்தில் வெளியான பிளஸ்2 தேர்வில் 600க்கு 520 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்று இருந்தார்.

இந்த நிலையில் ரவி அப்பகுதியில் புதிதாக வீடு கட்டி வருகிறார். இதனால் செல்வி, மகள் ரஞ்சனி ஆகியோர் வீட்டு வேலைகளை கவனித்து வந்தனர். இளைய மகள் சந்தியா வீட்டில் சமையல் செய்து தனது தந்தை மூலம் தாயார் மற்றும் அக்காளுக்கு அனுப்பி வந்துள்ளார்.

நேற்று மதியம் வெகுநேரமாகியும் வீட்டிலிருந்து உணவு வராததால் செல்வியும், ரஞ்சனியும் வீட்டிற்கு சென்று பார்த்துள்ளனர். அப்போது சந்தியா கயிற்றால் கழுத்தை இறுக்கியும், ரவி தூக்கில் தொங்கியவாறும் பிணமாக கிடந்துள்ளனர். இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர்கள் அலறி துடித்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இதில், தந்தைமகளுக்குஇடையே ஏற்பட்ட தகராறில் ரவி தனது மகளை கயிற்றால் கழுத்தை இறுக்கி கொலை செய்து விட்டு பின்னர் தானும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# 5 நாட்கள் சுற்றுப்பயணமாக ஊட்டி செல்கிறார் முதல்வர்



நீலகிரி மே.13

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலாதலங்களை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கவும், கவரவும் மாவட்டம் நிர்வாகம் சார்பில் கோடைக்காலத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது.

அதன்படி நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில், ஆண்டுதோறும் மே மாதம் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கோடை விழா கடந்த 3ந் தேதி கோத்தகிரியில் காய்கறி கண்காட்சியுடன் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி 3 நாட்கள் நடைபெற்றது. ஊட்டி ரோஜா பூங்காவில் நடைபெற்று வரும் ரோஜா கண்காட்சி இன்று (திங்கட்கிழமை) நிறைவடைகிறது. இதையடுத்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஊட்டி மலர் கண்காட்சி வருகிற 15ந் தேதி தொடங்கி 11 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் மலர் கண்காட்சியை தொடங்கி வைக்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 5 நாட்கள் சுற்றுப்பயணமாக இன்று ஊட்டிக்கு செல்கிறார். அவர், சென்னையில் இருந்து இன்று காலை விமானம் மூலம் கோவை சென்று, அங்கிருந்து சாலை மார்க்கமாக கார் மூலம் ஊட்டிக்கு செல்கிறார். ஊட்டிக்கு வரும் வழியில் கோத்தகிரி, கட்டப்பெட்டு உள்ளிட்ட இடங்களில் கட்சியினர், பொதுமக்கள் வரவேற்பு அளிக்கின்றனர்.

இதைத்தொடர்ந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊட்டியில் உள்ள விருந்தினர் மாளிகையில் ஓய்வு எடுக்கிறார்.

பின்னர் பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார். மேலும் பழங்குடியின மக்களை சந்தித்து பேசஉள்ளார். வருகிற 15ந் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 127வது மலர் கண்காட்சியை தொடங்கி வைத்து, மலர் அலங்காரங்களை பார்வையிடுகிறார்.

இதையடுத்து 16ந் தேதி 5 நாட்கள் சுற்றுப்பயணம் முடிந்து சென்னை திரும்புகிறார். முதல்அமைச்சர் வருகையையொட்டி மாவட்ட நிர்வாகம் முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் 1,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

# கன்னியாகுமரி: பிளஸ்2 மாணவி கர்ப்பம்: சக மாணவன் தலைமறைவு

கன்னியாகுமரி மே.13

கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிச்சந்தை அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 16 வயது சிறுமி, பிளஸ்2 முடித்து விட்டு தற்போது கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்புக்கு சென்று வருகிறார். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அந்த மாணவி மிகவும் சோர்வுடனும், வயிற்று வலியாலும் அவதிப்பட்டார். இதனால் தாயார் மாணவியை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். அங்கு மருத்துவர் பரிசோதனை செய்ததில், மாணவி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த தாயார், அவரிடம் நடந்த விவரத்தை கேட்டுள்ளார். அப்போது சம்பவத்தன்று தனது சகமாணவனின் வீட்டுக்கு நோட்டு, புத்தகங்கள் கொடுப்பதற்காக சென்றதாகவும், அப்போது வீட்டுக்குள் தனியாக இருந்த மாணவன், தன்னிடம் திருமண ஆசைவார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் கூறி கதறி அழுதார்.

இதுகுறித்து தாய் குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் மாணவன் மீது வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வருகின்றனர்.

# டிரம்ப் அறிவிப்பு புரியாத புதிராக இருக்கிறது திருமாவளவன்



திருச்சி, மே.13


இந்தியா பாகிஸ்தான் இடையிலான தாக்குதல் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்ட அறிவிப்பு புரியாத புதிராக உள்ளது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;

"பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் மேற்கொண்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை கட்சி வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் ஆதரித்தோம். ஆனாலும் இந்தியா பாகிஸ்தான் இடையே பெரிய அளவிலான போர் மூண்டு விடக் கூடாது எனவும் வலியுறுத்தினோம்.

இந்த சூழலில் போர் நிறுத்தம் தொடர்பான தகவல் ஆறுதலை தருகிறது. ஆனால் அந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் செய்தார் என்பது புரியாத புதிராக இருக்கிறது. இந்த அறிவிப்பை இந்திய அரசு அல்லது பாகிஸ்தான் அரசு செய்திருக்க வேண்டும். இருப்பினும் அமெரிக்கா தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தியதை நாம் வரவேற்கிறோம். இரண்டு நாடுகளுக்கு இடையில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டும் என ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள அனைவரும் விரும்புகிறோம்."

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

# மே 13ந்தேதி முதல் இளநிலை கியூட் தேர்வு : அட்மிட் கார்டு பதிவிறக்கம் செய்வது எப்படி?



சென்னை, மே.13

மத்திய பல்கலைக்கழகங்களில் இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வான இளநிலை க்யூட் (CUET UG 2025) தேர்வு தேசிய தேர்வு முகமை (NTA) மூலம் நடத்தப்படுகிறது. 2025ம் ஆண்டுக்கான க்யூட் தேர்வு மே 13ம் தேதி முதல் ஜூன் 3 வரை நடத்தப்பட உள்ளது.

இந்தியா பாகிஸ்தான் இடையேயான தாக்குதலினால் தேர்வு ஒத்திவைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மே 13ம் தேதி முதல் 16 வரை நடக்கவிருக்கும் தேர்வுகளுக்கான அட்மிட் கார்டு வெளியாகி உள்ளது.

இளநிலை கியூட் தேர்வு 2025 அட்மிட் கார்டு பதிவிறக்கம் செய்வது எப்படி?

தேர்வர்கள் https://cuet.nta.nic.in/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அட்மிட் கார்டை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

படி 1 : https://cuet.nta.nic.in/ என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு செல்லவும்.

படி 2 : அதில் முகப்பு பக்கத்தில் Admit Card என்று இடம்பெற்று இருக்கும்.

படி 3 : அதனை கிளிக் செய்யவும். அதில் விண்ணப்ப எண், பாஸ்வார்டு, CAPTCHA ஆகியவை உள்ளிட்டு அட்மிட் கார்டை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

# வார விடுமுறையை கொண்டாட ஒகேனக்கலில் குவிந்த சுற்றுலா பயணிகள்



அங்கு பரிசல் பயணம் மேற்கொண்ட சுற்றுலா பயணிகள், ஆயில் மசாஜ்


தர்மபுரி, மே.13

தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலமான ஒகேனக்கல்லுக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ள நிலையில், இன்று வார விடுமுறை என்பதால் ஒகேனக்கல் அருவியில் இன்று சுற்றுலா பயணிகள் அதிகஅளவில் குவிந்தனர். அங்கு பரிசல் பயணம் மேற்கொண்ட சுற்றுலா பயணிகள், ஆயில் மசாஜ் செய்து, பிரதான நீர் வீழ்ச்சிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால், பரிசல் ஓட்டிகள், மசாஜ் தொழிலாளர்கள், மீனவர்கள், வியாபாரிகள் ஆகியோர் தங்களுக்கு வருவாய் அதிகரித்திருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# வன்னியர் சங்க மாநாட்டிற்கு சென்ற வேன் கவிழ்ந்து விபத்து ஒருவர் பலி




மகாபலிபுரம், மே.13

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த மருவத்தூரிலிருந்து மகாபலிபுரத்தில் வன்னியர் சங்கம் சார்பில் நடைபெறும் சித்திரை முழு நிலவு மாநாட்டிக்கு புறப்பட்டு சென்ற வேன், சீர்காழி அட்டகுளம் அருகே புறவழிச் சாலை இணைப்பு சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வேனில் பயணம் செய்த மருவத்தூர் பகுதியை சேர்ந்த விஜய், முத்துராமன், தேவா, சுந்தர் உள்ளிட்ட ஆறு பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் அருகிலிருந்தவர்கள் உதவியுடன் மீட்கப்பட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அதில் விஜய் என்பவர் சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

# நாளை தமிழக முதல்அமைச்சருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம்: செவிலியர்கள் சங்கம் அறிவிப்பு







கன்னியாகுமரி மே.13

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் சுபின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 26.4.2025 அன்று சென்னையில் நடைபெற்ற நமது சங்கத்தின் 3வது மாநில மாநாடு அறைகூவல் தீர்மானத்தின் அடிப்படையில் நமது வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி உலக செவிலியர் தினமான 12.5.2025 அன்று (நாளை) கோரிக்கை அட்டை அணிந்து பணி செய்வதுடன் தமிழ்நாடு முதல்அமைச்சருக்கு நமது கோரிக்கைகளை அஞ்சல் அட்டை மூலம் அனுப்ப அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். மேலும் எதிர்வரும் அனைத்து போராட்டங்களிலும் பெருந்திரளாக கலந்து கொண்டு நமது கோரிக்கைகளை வென்றெடுக்க அனைவரையும் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. திமுக தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டது போல் அனைத்து தொகுப்பூதிய செவிலியர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

2. உயர்நீதிமன்ற உத்தரவுப்படி எம்.ஆர்.பி. தொகுப்பூதிய செவிலியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும்.

3. எம்.ஆர்.பி. தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும்.

4. வெளிப்படையான பணியிட மாற்ற கலந்தாய்வு நடத்திட வேண்டும்.

5. செவிலியர் கண்காணிப்பாளர் நிலை 3 பணியிடங்களை மீண்டும் உருவாக்கிட வேண்டும்.

6. நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப NMC மற்றும் IPHS பரிந்துரைகளின் அடிப்படையில் நிரந்தர செவிலியர் பணியிடங்கள் உருவாக்கிட வேண்டும்.

7. பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேல் படிப்பு முடித்த செவிலியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும்.

8. கொரோனா காலகட்டத்தில் பணி செய்து பணி நீக்கம் செய்யப்பட்ட எம்.ஆர்.பி. மூலம் பணி நியமனம் பெற்ற அனைத்து செவிலியர்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும்.

9. செவிலியர்களுக்கு 7, 14, 20 மற்றும் 25 ஆண்டுகளில் பதவி உயர்வுக்கான ஊதியம் நிர்ணயம் செய்திட வேண்டும்.

10. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் செவிலியர் கல்லூரிகள் உருவாக்கிட வேண்டும்.

11. கருவூலம் மூலம் ஊதியம் பெறும் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ரூ.18 ஆயிரம் ஊதியம் நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும்.

12. ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலி பணியிடங்களை நிரப்பி 8 மணி நேர பணியினை உறுதி செய்திட வேண்டும்.

13. ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரந்தர தன்மையுடைய செவிலியர் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர் பணியிடங்களை உருவாக்கிட வேண்டும்.

14. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் Data Entry Operator பணியிடங்களை உருவாக்கிட வேண்டும்.

15. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரவு காவலர்களை பணியமர்த்த வேண்டும்.

16. மத்திய அரசு மருத்துவமனைகளில் உள்ளது போல் செவிலியர் பதவி பெயரை செவிலியர் அலுவலர் (Nursing Officer) என்று மாற்றிட வேண்டும்.

17. லாலி சீமாட்டி செவிலியர் காப்பகத்தை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

18. அரசு மருத்துவமனைகளில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பி தொகுப்பூதிய செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

19. அரசு செவிலியர் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள செவிலியர் போதகர் நிலை2 காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

20. அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதாரநிலையங்களில் விசாக கமிட்டி அமைக்க வேண்டும்.

21. பொது சுகாதார துறையில் செவிலியர்களுக்கு வழங்கப்படும் பழிவாங்கும் மாற்றுப் பணி ஆணைகளை கைவிட வேண்டும்.

22. செவிலியர்களுக்கு பாரபட்சமற்ற முறையில் ஒரே விதமான சீருடை வழங்க வேண்டும்.

23. காலம் முறை ஊதியத்திற்கு ஈர்க்கப்பட்ட எம்.ஆர்.பி. செவிலியர்கள் அனைவரையும் காலதாமதமின்றி பணி வரன்முறை செய்ய வேண்டும்.

24. 2 வருடங்கள் பணி முடித்த மாற்றுத்திறனாளி தொகுப்பூதிய செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

25. உயர்கல்விக்காக பணி விடுவிப்பு செய்யப்பட்ட செவிலியர்களை கல்வி ஆண்டு முடிந்த பின்பு அவர்கள் பணி செய்த இடத்திலேயே மீண்டும் பணியமர்த்த வேண்டும். 20.5.2025 அன்று பழைய ஓய்வூதிய திட்டம், பணிப்பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் நடத்தும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் பங்கு பெற வேண்டும். 26.6.2025 அன்று சென்னையில் ஒரு நாள் (24 மணி நேர) தர்ணா போராட்டம் நடத்தப்படும். 17.7.2025 அன்று சென்னை DMS அலுவலகத்தில் பெருந்திரள் முறையீடு நடத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இளைஞர்கள் போதை பழக்கங்கள் இன்றி ஆரோக்கியமாக வாழவேண்டும் சவுமியா அன்புமணி



சென்னை, மே.13

வன்னியர் சங்கம் சார்பில் மாமல்லபுரம் அடுத்த திருவிடந்தை பகுதியில், சித்திரை முழு நிலவு வன்னியர் இளைஞர் பெருவிழா மாநாடு நடைபெற்றது. 12 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெறும் இந்த மாநாட்டில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளனர். பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், சவுமியா அன்புமணி உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்த 26 பேருக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மாநாட்டு திடலில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த வன்னியர் சங்க கொடியை பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் ஏற்றி வைத்தார். இதனைத்தொடர்ந்து பாமக மாநாட்டில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சித்திரை முழு நிலவு மாநாட்டில், பசுமை தாயகத்தின் தலைவர் சவுமியா அன்புமணி பேசுகையில், "நம் முன்னோர்கள் இல்லை என்றால், நாமும் இல்லை. அது எந்த அளவிற்கு உண்மையோ, அதேபோல், நாம் இல்லை என்றால் நம் முன்னோர்களும் இல்லை. ஏனென்றால், நம் முன்னோர்களின் பெயர்களை சொல்ல நாம் மட்டும்தான் இருக்கிறோம். வேறு யாரும் நம் முன்னோர்களின் பெயரையோ, அந்த தியாகிகள், வல்லவர்கள், ராஜாக்கள், ராஜாதிராஜாக்கள் பெயரை சொல்ல மாட்டார்கள், சொல்லவும் தயங்குவார்கள். மறந்து போய்விடுவார்கள். அந்த முன்னோர்களான ராஜாதி ராஜாக்களின் பெயர்களை சொல்வதற்கு நாம் மட்டும்தான் இருக்கிறோம். அவர்களை இன்றும் நினைவில் வைத்துள்ளோம்.

நித்திய கல்யாண பெருமாள் குடிகொண்டிருக்கும் இந்த திடலில் மாநாடு சிறப்பாக நடந்து வருகிறது. திடலுக்கு எதிரில் உள்ள நிலமானது, ஆயிரம் காணி ஆளவந்தாருடைய நிலம். 1,300 ஏக்கரை கோயிலுக்கும், மக்களுக்கும் தானமாக வழங்கியவர் ஆயிரம் காணி ஆளவந்தார். அந்த இடத்தில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் ஒன்று நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னை மக்களுக்கு இந்த திட்டத்தின் மூலமாகதான் நல்ல தண்ணீர் கிடைத்து கொண்டிருக்கிறது. ஆனால், அந்த திட்டத்திற்கு கூட ஆயிரம் காணி ஆளவந்தார் நாயக்கரின் பெயரை யாரும் வைக்கவில்லை. அதை கூட நாம்தான் சொல்ல வேண்டும். நாம்தான் அதை அவர்களுக்கு நினைவுப்படுத்த வேண்டும்.

இளைஞர்கள், மது, போதை, கஞ்சா போன்ற எந்த பழக்கமும் இன்றி உடல் நலம், மன நலத்துடன் நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

அதற்கு நல்ல படிப்பு வேண்டும். நீங்கள் அனைவரும் நன்றாக படித்து, நல்ல வேலையில் அமர வேண்டும். சுய தொழில் செய்ய வேண்டும். படிப்பையும் மீறி திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அனைவரும் நம்முடைய வரலாறை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

இவ்வாறு அவர் பேசினார்.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
13.5.2025

# செல்போனில் படம் பார்த்ததை பாட்டி கண்டித்ததால் 10 வயது சிறுவன் தற்கொலை

சென்னை மே.13

பெங்களூருவைச் சேர்ந்தவர் சிவசங்கர். இவரது மகன் மாரியப்பன் (10 வயது). பெங்களூருவில் உள்ள பள்ளியில் 4ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 5ம் வகுப்புக்கு சென்றிருந்தார். பள்ளிகளுக்கு கோடை விடுமுறை என்பதால் சென்னை பல்லாவரம் அடுத்த பம்மல், மூங்கில் ஏரி, கஸ்தூரி பாய் தெருவில் உள்ள தனது பாட்டி வீட்டுக்கு மாரியப்பன் வந்திருந்தார்.



நேற்று முன்தினம் காலை அவரது பாட்டி வேலைக்கு சென்றுவிட்டார். மாலையில் பணி முடிந்து திரும்பியபோது, பூட்டிய வீட்டுக்குள் மாரியப்பன் தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த சங்கர்நகர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

முதல்கட்ட விசாரணையில் மாரியப்பன் செல்போனில் படம் பார்த்ததை அவரது பாட்டி கண்டித்ததாகவும், இதனால் ஏற்பட்ட விரக்தியில் அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரியவந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

# ரயிலில் தவறவிட்ட 6 லட்சம் மதிப்புள்ள நகையை பத்திரமாக மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு

சென்னை, மே.13

ரயில் மதத் (Rail madad) புகார் மூலம் ரயில் பயணி தவறவிட்ட ஆறு லட்சம் மதிப்புள்ள ஏழு சவரன் தங்க நகை மற்றும் உடைமைகளை எக்மோர் ரயில்வே பாதுகாப்பு படையினர் பத்திரமாக மீட்டு உரியவரிடம் ஒப்படைத்தனர்.

சென்னை ரயில்வே கோட்ட ரயில்வே பாதுகாப்பு படை ஆணையாளர் பி.ராமகிருஷ்ணன் மற்றும் உதவி கோட்ட ஆணையாளர் ராமமூர்த்தி உத்தரவின் பேரில் ரயில்வே பாதுகாப்பு படை இன்ஸ்பெக்டர் கே.பி. செபாஸ்டியன் தலைமையில் பொதிகை அதிவிரைவு வண்டியில் விழுப்புரத்தில் இருந்து சென்னை எக்மோர் வரை பாதுகாப்பு பணியில் இருந்த ரயில்வே பாதுகாப்பு படை காவலர்கள் 1) ராஜேந்திர குணாவத் மனோஜ் குமார் 3) சுகன்யா 3) வித்யா ஆகியோர் எக்மோர் ரயில் நிலையத்தில் வண்டி வந்த பிறகு எம் டி ராக்கை(EmptyRack) சோதனை செய்தபோது, ஏசி கோச்சில் யாரும் உரிமை கோராத ஒரு பை இருப்பதை கண்டனர். உடனடியாக அதை கைப்பற்றி ஸ்டேஷன் மாஸ்டர் முன்னிலையில் சோதனை செய்த போது 6 லட்சம் மதிப்புள்ள ஏழு சவரன் நகை மற்றும் பொருள்கள் இருந்தனர்.



சற்று நேரத்தில் ரயில்வே பாதுகாப்பு படை கண்ட்ரோல் ரூமில் இருந்து ரயில் பயணி பையை தாவர விட்டதாக ரயில் மதத்து(Rail mada) புகார் பெறப்பட்டது.

பின்னர் புகார் அளித்தவரிடம் on duty officer Santosh.D/SIPF தொடர்பு கொண்டு பேசியபோது அவர் தென்காசியில் இருந்து தாம்பரத்திற்கு ரயிலின் பயணம் செய்ததாகவும், பையை மறந்து தாம்பரம் ரயில்வே ஸ்டேஷன் இறங்கி விட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அதில் நகை பணம் மற்றும் பொருட்கள் இருந்ததாக தெரிவித்தார்.

பின்பு அவரை எக்மோர் அலுவலகத்திற்கு வரவைத்து அவருடைய உடைமைகள் மற்றும் அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டு ரயில்வே காவல்துறை முன்னிலையில் ரயில்வே பாதுகாப்பு படையால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதற்கு ரயில் பயணி துரிதமாக செயல்பட்டு பையை மீட்ட ரயில்வே பாதுகாப்பு படையினருக்கு பாராட்டு தெரிவித்தார்.

# சென்னை பரங்கிமலையில் செல்போன் பேசிக்கொண்டே தண்டவாளத்தை கடந்த இருவர் ரயில் மோதி உயிரிழப்பு




சென்னை, மே.13

சென்னை பரங்கிமலையில் செல்போன் பேசிக் கொண்டே தண்டவாளத்தை கடந்த இருவர் உயிரிழந்துள்ளனர். ரயில் வருவதை கவனிக்காமல் தண்டவாளத்தை கடந்த போது ரயில் மோதி உயிரிழந்துள்ளனர். எழும்பூரில் இருந்து வந்துகொண்டிருந்த மெமு ரயில் மோதி முகமது நபூல், சபீர் அகமது உயிரிழந்துள்ளனர்.

# நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து மாநகரில் பொது இடங்களில் 70 கொடிக்கம்பங்கள் அகற்றம்



நாமக்கல் , மே.13

நாமக்கல் மாநகரில், பொது இடங்களில் சாலையோரங்களில் இருந்த 70 கொடிக்கம்பங்கள் அகற்றப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி, மாநகராட்சி அலுவலர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் சாலையோரங்களிலும், பொதுமக்களுக்கு இடையூறாகவும் அரசியல் கட்சியினர் மற்றும் பொது அமைப்பினர் வைத்துள்ள கொடிக்கம்பங்களை அகற்றும்படி, உயர்நீதிமன்ற மதுரை கிளை கடந்த மாதம் உத்தரவிட்டது.

இதையடுத்து, நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சாலையோரம் உள்ள கொடிக்கம்பங்களை அகற்றும்படி, மாவட்ட கலெக்டர் உமா நடவடிக்கை எடுத்துள்ளார். இதையடுத்து, நெடுஞ்சாலைத்துறையினர், உள்ளாட்சி அமைப்பினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். நாமக்கல் மாநகராட்சி எல்லையில் உள்ள பல்வேறு சாலைகளில், மொத்தம் 89 கொடிக்கம்பங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த கொடிக்கம்பங்களை அகற்ற வேண்டும் என மாநகராட்சி கமிஷனர் சிவக்குமார், கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு அரசியல் கட்சியினர் மற்றும் பொது அமைப்பின் பொறுப்பாளர்களுக்கு கடிதம் அனுப்பினார்.

இதனை ஏற்று மாநகரில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த 19 கொடிக்கம்பங்களை வைத்தவர்களே அகற்றி விட்டனர். இதைத்தொடர்ந்து மீதமுள்ள கொடிக்கம்பங்களை அகற்ற மாநகராட்சி கமிஷனர் சிவக்குமார், நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து மாநகராட்சி செயற்பொறியாளர்(திட்டங்கள்) கலைவாணி, துப்புரவு அலுவலர் திருமூர்த்தி, மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் பாஸ்கர், ஜான், ஆகியோர் தலைமையிலான பணியாளர்கள், கடந்த இரண்டு நாட்களாக நாமக்கல் மாநகரில் உள்ள அனைத்து சாலைகளிலும் உள்ள அரசியல் கட்சியினர் மற்றும் பொது அமைப்பினரின் கொடிக்கம்பங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

28 கொடிக்கம்பங்களும், நேற்று 21 கொடிக்கம்பங்களும் அகற்றப்பட்டது. மாநகராட்சி பணியாளர்க, நேற்று நாமக்கல் மோகனூர் ரோடு, திருச்சி ரோடு, திருச்செங்கோடு ரோடு போன்ற சாலைகளில் இருந்து கொடிக்கம்பங்களை பொக்லைன் கொண்டு அப்புறப்படுத்தி, மாநகராட்சி வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அப்போது, போக்குவரத்துக்கு இடையூறாக சாலையோரம் வைக்கப்பட்டிருந்த கடைகளின் விளம்பர பலகைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'நீதிமன்றத்தின் உத்தரவின் படியும், மாவட்ட கலெக்டரின் அறிவுறுத்தலின் பேரிலும், மாநகரில் சாலைகளில் இருந்த கொடிக்கம்பங்கள் அகற்றப்பட்டுள்ளன. மாநகரில் அனைத்து இடங்களிலும் இருந்த கொடிக்கம்பங்கள் மற்றும் பீடங்கள் கடந்த இரண்டு நாட்களாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை 70 கொடிக்கம்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இடங்களில் மீண்டும் யாரும் கொடிக்கம்பங்களை வைக்க வேண்டாம்,' என்றனர். இதேபோல், மாவட்டத்தில் மாநில நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் உள்ள கொடிக்கம்பங்களையும் கடந்த இரண்டு நாட்களாக ஊழியர்கள் அப்புறப்படுத்தி வருகின்றனர்.

# ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கோடை கால வனவிலங்கு கணக்கெடுப்பு பணி துவக்கம்

பொள்ளாச்சி , மே.13

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் கோடை கால வன விலங்கு கணக்கெடுப்பு பணி நேற்று துவங்கியது. கோவை மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பகம் மேற்கு தொடர்ச்சி மலையில் 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது.

இதில், பொள்ளாச்சி கோட்டத்திற்கு உட்பட்ட பொள்ளாச்சி, வால்பாறை, மானாம்பள்ளி, டாப்சிலிப் உள்ளிட்ட 4 வனச்சரகங்களில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் குளிர்கால வன விலங்கு கணக்கெடுப்பும், மே மாதத்தில் கோடை கால வனவிலங்கு கணக்கெடுப்பும் என 2 கட்டமாக நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான கோடை கால வனவிலங்கு கணக்கெடுப்பானது அட்டகட்டியில் வனத்துறை பயிற்சி மையத்தில் பயிற்சியுடன் தொடங்கியது. நேற்று முதல் களப்பணி தொடங்கியது.தேசிய புலிகள் ஆணையத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கணக்கெடுப்பு பணிகள் 8 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





அதற்கான பயிற்சி வகுப்புகள் அட்டகட்டி வனத்துறை பயிற்சி மையத்தில் நடந்தது. பயிற்சியில் பங்கேற்ற வனத்துறை ஊழியர்கள், நேற்று களப்பணியில் ஈடுபட்டனர். வரும் 17ம் தேதி வரை 8 நாட்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. 32 இடங்களில் 62 நேர்கோட்டு பாதையில் கணக்கெடுப்பு களப்பணிகள் தொடரப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி பகுதியில் வனச்சரகர் தலைமையில் வேட்டைதடுப்பு காவலர், வனவர், வனக்காப்பாளர், தன்னார்வலர் உள்பட 5 பேர் கொண்ட குழுவினர் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, பல இடங்களில் யானை உள்ளிட்ட வன விலங்குகளின் கால் தடம் இருப்பதை அறிந்து அதனை ஆய்வு செய்தனர். அதுபோல், டாப்சிலிப்பை சுற்றியுள்ள வனப் பகுதியில், வனச்சரகர் முன்னிலையில் வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணி நடந்தது.

அப்போது, வனத்துறையினர் யானை நேரில் பார்த்து கணக்கெடுத்தனர். மேலும், பல இடங்களில், கண்ணில் தென்பட்ட யானைகளின் கால் தடம், சாணம் போன்றவற்றை கொண்டும், அங்கு யானைகள் நடமாட்டம் உள்ளதா என்பதையறிந்து கணக்கெடுத்தனர்.

ஆனைமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட பொள்ளாச்சி மற்றும் டாப்சிலிப் வனச்சரகங்களில், நேற்று துவங்கப்பட்ட கோடை கால வனவிலங்கு கணக்கெடுப்பு பணியானது, வரும் 17ம் தேதி வரை நடைபெறும் என்றும். அந்தந்த வனச்சரகங்களில் 5 குழுவினர் தனித்தனியாக சென்று கணக்கெடுப்பில் ஈடுபட்டு வருவதாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# "என் காதலே" திரை விமர்சனம்




மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த லிங்கேஷ், தனது மாமன் மதுசூதனன்கட்டுப்பாட்டில்வளர்கிறார்.அவரதுமகள்திவ்யாவுடன், லிங்கேசுக்கு நிச்சயதார்த்தமும் நடக்கிறது. இதற்கிடையில் லண்டனில் இருந்து தமிழ் கலாசாரத்தை ஆய்வு செய்ய வரும் லியா, லிங்கேஷ் மீது காதல் வசப்படுகிறார். லிங்கேசும் மனதை பறிகொடுத்து விடுகிறார். இருவரும் ஜோடியாக ஊருக்குள் சுற்றி திரிவது பிரச்சினைகளை உண்டாக்கிறது. ஆத்திரம் அடையும் மதுசூதனன் ஊர் மக்களை திரட்டி லியாவை விரட்டுகிறார். லிங்கேஷ் லியா காதல் என்ன ஆனது? தனது மாமனை திருமணம் செய்யும் லட்சியத்தில் திவ்யா வென்றாரா? யாருடைய காதல் ஜெயித்தது? என்பது படத்தின் மீதி கதை.

கோபப்பார்வை, அடிதடி, அரைகுறை ஆங்கில பேச்சு என கதாபாத்திரமாகவே மாறி இருக்கிறார் லிங்கேஷ். முறை பெண்ணா, காதலியா? என்ற சூழலில் அவரது நடிப்பு அசத்தல்.

முறை பெண்ணாக வரும் திவ்யா அழகான நடிப்பால் கவருகிறார். வெளிநாட்டு பெண்ணாக லியா தோற்றத்திலும், தமிழ் கலந்த ஆங்கில உச்சரிப்பிலும் வசீகரிக்கிறார்.

மதுசூதனன், காட்பாடி ராஜன், கஞ்சா கருப்பு, 'லொள்ளு சபா' மாறன், சித்தா தர்ஷன், செந்தமிழ் என அனைவருமே நிறைவான நடிப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

சாண்டி சாண்டெல்லோ இசையும், டோனிசென், வெங்கடேஷ் ஆகியோரின் ஒளிப்பதிவும் படத்துடன் ஒன்ற செய்கிறது.

இரண்டாம் பாதியில் நாடகத் தனமான காட்சிகள் தொய்வு தருகிறது. காட்சிகள் யூகிக்க முடிவது பலவீனம்.

இரு வேறு பெண்களின் உணர்வுகளை ஒருசேர திரைக்கதையில் கொட்டி, ஒரு முக்கோண காதல் கதையாக படத்தை இயக்கி கவனம் ஈர்க்கிறார் ஜெயலட்சுமி.

# மே 14ம் தேதி படப்பிடிப்பு நடக்கும் தயாரிப்பாளர்கள் சங்கம் அறிவிப்பு




தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்துக்கும் பெப்சி அமைப்புக்கும் ஏற்பட்ட மோதல் போக்கை அடுத்து, தமிழ்நாடு திரைப்பட தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்ற புதிய அமைப்பைத் தயாரிப்பாளர் சங்கம் தொடங்கி இருக்கிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள 'பெப்சி' அமைப்பு, வரும் 14ம் தேதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தமும், கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்த முடிவு செய்துள்ளது. அன்று படப்பிடிப்புகள், போஸ்ட் புரொடக்ஷன் உள்ளிட்ட எந்த பணிகளும் நடைபெறாது என்றும் ஆர்ப்பாட்டம் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் அரங்கு அருகே காலை 9 மணி முதல் 1 மணி வரை நடக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் செய்தியாளர்களை நேற்று சந்தித்த தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவர் முரளி ராமசாமி மற்றும் நிர்வாகிகள் கூறும்போது, "தமிழ்நாடு திரைப்பட தொழிலாளர்கள் கூட்டமைப்பை நாங்கள் ஆரம்பிப்பது, தயாரிப்பாளர்களை குறிப்பாக சிறு படத் தயாரிப்பாளர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான்.

வரும் 14ம் தேதி வேலை நிறுத்தம் என்று பெப்சி அறிவித்துள்ளது. அதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. நாங்கள் பெப்சி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டாம் என்று யாரிடமும் சொல்லவில்லை. அன்று எங்கள் அமைப்பு படப்பிடிப்பைநடத்தும்.தயாரிப்பாளர்கள்,புதிதாகநாங்கள்தொடங்கிஇருக்கிற,தமிழ்நாடுதிரைப்படத்தொழிலாளர்கள் கூட்டமைப்பு தொழிலாளர்களைப் பயன்படுத்தி படப்பிடிப்புகளை நடத்தலாம்" என்று தெரிவித்துள்ளார்.

# "டிடி நெக்ஸ்ட் லெவல்" கஸ்தூரியின் கதாபாத்திர அறிமுக போஸ்டர் வெளியீடு




கோலிவுட்டில் நகைச்சுவை நடிகராக அறிமுகமாகி, இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக வளர்ந்திருப்பவர் சந்தானம். 2016ல் சந்தானம் நடிப்பில் வெளிவந்த 'தில்லுக்கு துட்டு', 2023ல் வெளிவந்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' ஆகிய படங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. அதனை தொடர்ந்து இதன் மூன்றாம் பாகமாக 'டிடி நெக்ஸ்ட் லெவல்' உருவாகி உள்ளது.

ஆர்யாவின் தயாரிப்பில் உருவாகும் இந்த படத்தை பிரேம் ஆனந்த் இயக்கியுள்ளார். இதில் சந்தானத்துடன் இணைந்து கஸ்தூரி, செல்வராகவன், கவுதம் வாசுதேவ் மேனன், மொட்டை ராஜேந்திரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

வருகின்ற 16ம் தேதி திரைக்கு வர உள்ள இந்த படத்திற்காக ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தநிலையில் இப்படத்திற்கு தணிக்கை வாரியம் 'யு/ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்நிலையில் படக்குழு நடிகை கஸ்தூரியின் கதாபாத்திர போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படத்தில் கஸ்தூரி சந்தானத்தின் அம்மாவாக தேவகி என்ற கதாபாத்திரத்திலும், ஷில்பா என்ற கதாபாத்திரத்திலும் நடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல். தொடரை 16ந் தேதி தொடங்க திட்டம்..?



இந்தியா பாகிஸ்தான் இடையே நிலவிய போர் பதற்றத்தால் நாட்டில் அசாதாரணமான சூழல் நிலவியது. இதனால், 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் ஒரு வாரம் நிறுத்தப்படுவதாக இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்தது. இதையடுத்து பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் தாயகம் திரும்பினர். இன்னும் 12 லீக் மற்றும் இறுதிப்போட்டி உள்பட 4 பிளேஆப் சுற்று என மொத்தம் 16 ஆட்டங்களை நடத்த வேண்டி உள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டன. இதன் காரணமாக ஐ.பி.எல். போட்டியை மீண்டும் தொடங்க இந்திய கிரிக்கெட் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதையொட்டி ஐ.பி. எல். நிர்வாக குழு உறுப்பினர்களும், கிரிக்கெட் வாரிய நிர்வாகிகளும் நேற்று ஆலோசனை நடத்தினர். இந்நிலையில், இந்த ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன்படி, கடந்த 9ந்தேதி லக்னோவில் நடைபெற இருந்த பெங்களூரு லக்னோ ஆட்டத்தில் இருந்து தொடர் தொடங்கும் எனவும், வருகிற 16 அல்லது 17ந்தேதி போட்டி தொடர் மீண்டும் தொடங்கி விடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. தங்கள் அணி வீரர்களை திரும்ப அழைக்கும்படி 10 அணி நிர்வாகங்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய போட்டிக்கான அட்டவணை இன்று அவர்களிடம் வழங்கப்படும் என கூறப்படுகிறது.

மேலும், மீதமுள்ள ஆட்டங்கள் அனேகமாக 3 இடங்களில் நடத்தப்படும். இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்று மற்றும் வெளியேற்றுதல் நடத்தும் இடத்தில் (ஐதராபாத்) மாற்றம் இல்லை. ஆனால் இறுதிப்போட்டியை கொல்கத்தா ஈடன்கார்டனில் நடத்துவதில் சிக்கல் உள்ளது. புதிய அட்டவணைப்படி மே.31 அல்லது ஜூன்.1ந்தேதி இறுதிப்போட்டி நடக்க வாய்ப்புள்ளது.

அந்த சமயத்தில் கொல்கத்தாவில் மழை பெய்வதற்கு அதிக வாய்ப்புள்ளது. அதனால் இறுதிப்போட்டி கொல்கத்தாவில் இருந்து அகமதாபாத்துக்கு மாற்றப்படலாம் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

# நாங்கள் விளையாடிய விதத்தில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் ஹர்மன்ப்ரீத் கவுர்நா



இந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய 3 நாட்டு மகளிர் அணிகள் இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் இலங்கை தலைநகர் கொழும்புவில் நடைபெற்றது. இதில் லீக் சுற்று முடிவில் இந்தியா, இலங்கை அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. தென் ஆப்பிரிக்கா ஒரு வெற்றி, 3 தோல்வியுடன் (2 புள்ளி) கடைசி இடத்துக்கு தள்ளப்பட்டு வெளியேறியது.

இந்த நிலையில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா இலங்கை அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 342 ரன்கள் குவித்தது. பின்னர் 343 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை 48.2 ஓவர்களில் 245 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆனது.

இதன் மூலம் 97 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இந்தியா தரப்பில் ஸ்னே ராணா 4 விக்கெட்டுகளும், அமன்ஜோத் கவுர் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தி வெற்றியில் முக்கிய பங்காற்றினர். இந்நிலையில், சாம்பியன் பட்டம் வென்றதை அடுத்து இந்திய கேப்டன் ஹர்மன்ப்ரீத் கவுர் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

முழு அணியையும் குறிப்பாக பேட்ஸ்மேன்களை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறோம். நாங்கள் நல்ல கிரிக்கெட்டை விளையாட விரும்பினோம். நாங்கள் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்ய விரும்பினோம். அதன்படி நாங்கள் விளையாடிய விதத்தில் மகிழ்ச்சி அடைகிறோம். நாங்கள் ஒருபோதும் மேம்படுவதை நிறுத்த விரும்பவில்லை, பேட்டிங், பவுலிங் அல்லது பீல்டிங் என பல பகுதிகளில் நாங்கள் சிறப்பாகச் செயல்பட முடியும்.

எங்கள் வேகப்பந்து வீச்சாளர்கள் தொடர்ந்து காயமடைகிறார்கள், அதை நாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும், பயிற்சியாளர்கள் அதில் பணியாற்றி வருகின்றனர்.நானும் ஸ்மிருதியும் தவிர மற்ற பேட்ஸ்மேன்களும், அவர்கள் பேட்டிங் செய்த விதம் மகிழ்ச்சியளிக்கிறது. ஸ்நே ராணா பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டார். இலங்கையில் உள்ள சூழ்நிலையை கணித்து அதற்குப் பழகி, இந்த கோப்பையை வென்றதில் மகிழ்ச்சி அடைந்தோம். இவ்வாறு அவர் கூறினார்.

# இத்தாலி ஓபன் டென்னிஸ்: அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் ஸ்வரேவ்



பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வரேவ் லிதுவேனியா வீரர் வில்லியஸ் கௌபாஸ் ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் அவர் 64, 60 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.